# Waltham Forest Tamil People

**Jointly Present**

# *Thamizhar Vizha*

# வோல்தம் பொறஸ்ட் தமிழ் மக்கள்

**இணைந்து வழங்கும்**

குடும்பமாய்க் கூடி கொண்டாடும் விழா

## தமிழர் விழா 2017


ஆடுவோம் பாடுவோம் கூடிக் கொண்டாடுவோம்

Waltham Forest Town Hall, Walthamstow, London E17 4SU

# GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION

## LONDON - UK





## SENSEI M. RAMATHAS

TRAINED BY MICHAEL CALANDRA

THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF

## ISSHINRYU WORLD KARATE ASSOCIATION

OKINAWA - JAPAN



**NEW BRANCH OPENING 16th MARCH 2016**
**at CATERHAM HIGH SCHOOL, CLAY HALL IG5 0QW**
**Wednesdays 5.00pm to 7.00pm**

**Other Branches:** Gants Hill • East Ham • Catford • Ley Street
Chadwell Heath • Sutton • Ilford Lane • Milton Keynes

M Ramathas
5th Dan
Isshin-Ryu Karate - Do

**Telephone: 07958 010 139**

**Email: goshinisshinryukarate@gmail.com • www.goshinisshinryukarate.com**

M Ramathas
5th Dan
Isshin-Ryu Karate - Do

# தமிழ் வாழ்த்துக் கீதம்

## தொகையறா

திங்களும் கதிரும் தென்றலும் தீயும்
பொங்கும் கடலும் புவனமும் உளவரை
எங்கள் தமிழும் எங்கள் இனமும்
தாங்கிடும் தளைத்திடும் என்றே நம்புவோம்!
பொங்கிடும் பூத்திடும் என்றே பாடுவோம்!

## பல்லவி

ஆதிக்குடியின் நீதிப்பொருளாய் மேதினி உதித்தவளே!
- தமிழ்த்தாயே! எம் தவமே
அநாதிப்பொருளாம் இமயத்திறைவன் காதில் ஒலித்தவளே!
- அமுதாகிச் செழித்தவளே!

## அனுபல்லவி

அன்பும் அறமும் இன்பம் தருமென அன்றே உரைத்தவளே
பண்பும் பயனும் அதுவேயாமென முன்பே விதைத்தவளே!

## சரணம்

"யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
பாரில் யாவரும் ஆண்டவன் சேய்கள்!
காதல் வாழ்வே கருணையின் பாதை!
கல்வியும் கேள்வியும் செல்வத்துட் செல்வம்!
ஈதலும் தானமும் உலகத்தின் தேவை!
என்றே அன்றே கூறிய தாயே .....
நீதியும் தர்மமும் நிகழ்த்திடும் தாயே!....நம் தமிழ் தாயே!

சரணம்

பசித்தோர் புசித்திடப் பகிர்ந்துண்ண வேண்டும்!
பாலர் பயங்களைப் போக்கிட வேண்டும்
பலப்போரில்லா அரசுகள் வேண்டும்!
ஞாலம் நல்லோர் வழிப்பட வேண்டும்!
விழிப்போடாண்களும் பெண்களும் சமமாய்
வீறுகொள் வாழ்வினைப் படைத்திட வேண்டும்!
மழிப்பும் ஒழிப்பும் மதங்களும் கடந்த
மானிடம் போற்றிடம் மார்க்கம் சொன்னாள்

ஆக்கம்: புலவர் சிவநாதன்

KATPAKAPATHY

**SHREE KARPHAHA VINAYAGAR TRUST (TEMPLE)**

Charity No: 1092252
2 - 4, Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 020 8527 3819 | Web: katpakapathy.com | Email: katpakapathy@gmail.com

# வாழ்த்து

எல்லாம் வல்ல கற்பகபதி கற்பக விநாயகர் பொற்பதம் வணங்கி இரண்டாவது வருடமாக நடைபெறும் தமிழர் விழாவிற்கு எமது வாழ்த்துக்கள் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்ற வருடம் நாம் தெரிவித்தது போல இவ்வருடமும் இனிவரும் வருடங்களில் நடைபெறும் தமிழர் விழா எவ்வித அரசியல், சமுக தலைமைகள், தனிமனிதர், ஸ்தாபனங்கள் போன்றவற்றின் தலையீடுகளின்றி சுதந்திரமாகவும் சிறப்பாகவும் நடைபெற வேண்டுமென வேண்டிக் கொள்கிறோம். அதற்கான சகல உதவிகளையும் ஒத்துழைப்பையும் நாமும் சக நிறுவனங்களும் வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

எல்லாம் வல்ல கற்பகபதி கற்பக விநாயகர் அருள் வேண்டி பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

இங்கனம்
சிவாச்சாரியார்கள்
அறங்காவலர்கள்
அடியார்கள்.

WALTHAM FOREST TAMIL SANGAM

வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கம்

# தமிழ்ச்சங்கத் தலைவரின் வாழ்த்துரை

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற ஆன்றோரின் வாக்கிற்கமைய தை பிறந்தது. நல்ல வழிகள் பிறக்கும் என்ற சிந்தனை உள்ளத்தில் வேர் விடத் தொடங்கியுள்ளது.

தமிழர் விழாவினை வோல்தம்ஸ்ரோவும் அதனைச்சூழ வாழும் தமிழ் மக்கள் அனைவரும் இணைந்து கொண்டாடுவது மிக்க மகிழ்ச்சி அளிக்கின்றது. இரண்டாவது வருடமாக இந்த விழா சிறப்புடன் ஆரம்பிப்பது உள்ளத்தில் ஓர் நம்பிக்கையைத் தருகின்றது.

எந்த ஒற்றுமைக்காக நாங்கள் போராடினோமோ அந்த ஒற்றுமை கண் முன்னே மலர்வது நெஞ்சுக்கு இதமளிக்கின்றது. செவிக்கு இதமளிக்கும் தமிழர் பாரம்பரிய இசைக்கருவிகளான பறை. நாதஸ்வரம். வீணை. வயலின். அத்துடன் கண்களுக்கு விருந்தளிக்கும் நடனங்கள். தமிழ்ச்சங்க பழைய மாணவர்களின் சூடான சுவை மிகுந்த விவாதங்கள். புலவர் சிவநாதன் தலைமையில் கவியரங்கம். சிறுமிகளின் உடையலங்கார நிகழ்வுகள். இன்னும் பற்பல சுவைமிகு நிகழ்ச்சிகள் அரங்கேறவுள்ளன.

அத்துடன் புலம்பெயர் தமிழர்க்கு நல்லது செய்த உள்ளங்களை அவர்கள் வாழும் நாளில் கௌரவப்படுத்தி புலர் ஒளி என்ற உயர்விருதையும் வழங்கிக் கௌரவிக்கின்றோம்.

இத்தகைய நிகழ்ச்சிகள் மூலம் தமிழ். கலை கலாச்சாரம் வளர்வதோடு. விட்டுப்போன உறவுகளும் இணைந்து மகிழ்ந்து உறவாடி விருந்துண்டு செல்வது எமக்கு மகிழ்வளிக்கின்றது.

இன்றைய நிகழ்வு போல் பல கலை நிகழ்வுகளை இந்த வோல்தம் பொறஸ்ட் தமிழ் மண்ணில் தொடர்ந்து நடாத்த அனைத்துத் தமிழ் மக்களும் இணைந்து கரம் கொடுக்க வேண்டுமென்று வோல்தம் பொறஸ்ட்டின் மூத்த சங்கமான வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் என்ற ரீதியில் அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றேன்.

வாழ்க தமிழ் வளர்க தமிழர் ஒற்றுமை.

அன்புடன்

**பால ரவீந்திரன்**

தலைவர்

வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கம்

21.01.2017

# EMMANUEL CHRISTIAN FELLOWSHIP

ECF
Walthamstow

58,ORFORD ROAD, WALTHAMSTOW, E17 9QL
PHONE: 020 85186118; 07810566893.
WEB: tamilchurchuk.com; tamilbibleresearchcentre.com
*Charity No: 1132782 Registration No: 07027521*


இரண்டாயிரத்துப் பதினேழாம் ஆண்டின் ஆரம்பத்தில், இங்கிலாந்திலுள்ள வோல்த்தம்ஸ்டோ நகரில் இயங்கும் சகல தமிழ் அமைப்புகளும் ஒன்றிணைந்து இனிதாய் நடாத்தும் தமிழர் விழாவிற்கு எனது இதயங்கனிந்த வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்வதில் இணையில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

தரணியிலே தனிச்சிறப்புடன் திகழும் நம் தாய்மொழியாம் தமிழின் பழமையும் புலமையும் மேன்மையும் வெளிப்படும் விதத்தில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.
யுத்த சூழ்நிலையால் தாய்நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து வந்துள்ள நாம், நம் பண்பாட்டையும், கலாசாரத்தையும் மொழியையும் மறவாமல் இருப்பதற்கும், ஆங்கில மொழியிலும் கலாசாரத்திலும் அதிகளவு மோகம் கொண்டுள்ள அடுத்த தலைமுறையினருக்கு நம்முடைய பண்பாட்டையும் பாரம்பரியங்களையும் கற்பிப்பதற்கும் கட்டிக்காப்பதற்கும் இவ்விழா உதவிடும் என்பது எனது நம்பிக்கையாயும் நல்லாசையாயும் உள்ளது.

தமிழர்களாகிய நாம் நம்முடைய கலாசாரத்தையும் பண்பாட்டையும் மொழியையும் வளர்ப்பதற்கு ஒன்றுபட்டு செயல்படுவோம். இறைவன் இயேசுவின் ஆசீர்வாதம் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.


எம்.எஸ்.வசந்தகுமார்

Nationwide franchise opportunities available

neo anzan®

abacus numeracy zone

*Give your child a head start in numeracy.*
*For ages 5 - 11*




## Neo Anzan - Mental Arithmetic programme

An ancient form of Japanese Mathematics, ANZAN uses an imaginary abacus to compute complex series of numbers. Neo Anzan is a structured programme for children, developed in the UK.

The box-shaped instrument is made of beads that serve as counters, which users push back and forth along rods, clicking their way through addition, subtraction, multiplication and long division.

This is a programme designed to enhance the following attributes in children:

- Ability to solve both arithmetic and mental arithmetic problems
- Speed and accuracy in calculations
- Listening skills
- Number memory
- Reflex reaction
- Image processing
- Attentiveness
- Mental arithmetic


Neo Anzan
Harrow Centre - Tel: 020 8933 9238 Mob: 07952 661 140
Ilford/Walthamstow Centre - Tel: 020 8550 8547 Mob: 078 8899 9694
East London Branch: 219 Forest Road, Walthamstow, E17 6HE

# SASI'S

## Sri Lankan & South Indian Restaurant

Catering service available for parties




7, Market Parade, Forest Road, Walthamstow, London E17 6DY

Tel: 020 8523 4811 | Mob: 07535 891 273

## SASI CASH & CARRY

உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள் மற்றும் மரக்கறி, பழவகைகள், உலருணவு வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

279 Forest Road, Walthamstow London E17 6HD | Tel: 020 8523 1711

Sri Merupuram Mahabhadrakali Amman Devasthanam
ஸ்ரீ மேருபுரம் மஹாபத்ரகாளி அம்மன் தேவஸ்தானம், லண்டன்
271, Forest Road, Walthamstow, London, E17 6HD, United Kingdom

www.srimerupuramuk.org Tel: 0208 531 0872 email: merupuram@gmail.com

உ
ஓம் சக்தி

தமிழ்ப் பேரவைக்கு அன்புசால் வணக்கம்!

"அன்பே சிவம்" என்னும் கூற்றுக்கமைவாக தமிழர்களாகிய நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பாகவும், பண்பாகவும் அன்றுதொட்டு இன்றுவரை ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

நம் முன்னோர்கள் இந்து கிறிஸ்தவர், முஸ்லிம் என்று சமயத்தைப் பிரித்து இந்-துக்கள் கோவிலில் வழிபாடு செய்வதும் கிறிஸ்தவர்கள் தேவாலயத்தில் வழிபாடு செய்வதும் முஸ்லிம்கள் பள்ளிவாசலில் தொழுகை செய்வதும் நடைமுறையில் காணப்பட்டாலும் வழிபடும் முறை தமிழில் தான் என்பது உறுதி.

பாடசாலைகளிலோ, கலை நிகழ்ச்சிகளிலோ, விளையாட்டு மைதானங்களிலோ ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்னும் முதுமொழிக்கிணங்க தமிழர்களாகிய நாம் அனைவரும் ஒற்றுமையுடனே தான் செயற்படுகின்றோம்.

எங்கள் ஒற்றுமை என்றைக்கும் நிலைத்து நிற்கும் என உறுதி பூண்டு ஸ்ரீ மேருபுரம் மஹா பத்திரகாளி அம்பாளின் பாதாரகமலங்களை வணங்கி வாழ்வோமாக!

"லோகா சமஸ்த்தா சுகினோ பவந்து"

**வோல்த்தம்ஸ்ரோ ஸ்ரீ மேருபுரம் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.**

வோல்த்தம்ஸ்ரோவிலும் அதன் சூழலிலும் பல தமிழ்ச்சங்கங்கள் தங்கள் அங்கத்தவர்களின் தேவைகளுக்கேற்ப இயங்கி வருகின்றன. இவை தமிழ்ச்சமுதாயத்தின் மொழி, சமயம், கலாச்சாரம், சமூக சேவை போன்ற சகல காரியத்திலும் ஊக்கத்துடன் செயல்பட்டு வருகின்றன.

தமிழ் மூத்தோர் நலன்புரிச்சங்கம் 16 வருடங்களுக்கு முன் வோல்த்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலய வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. வாரந்தோறும் வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி முதல் 12.00 மணி வரை கூட்டம் நடைபெறுவதுடன் கோயில் சிவாச்சாரியார்கள் அங்கத்தவர்களின் சமய அறிவிற்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் உறுதுணையாக இருக்கின்றார்கள். மேலும் சந்தர்ப்பம் வரும் போதெல்லாம், சமயம், கலாச்சாரம், மனநலம், உடல்நலம், தற்பாதுகாப்பு, உணவு தயாரித்தல் போன்ற விடயங்களைப் பற்றி சிறந்த பேச்சாளர்களையும் தக்க நிபுணர்களையும் அழைத்து கருத்துப் பரிமாற்றம் செய்வோம். தினம் யோகா வகுப்பும் இடைஇடையே உல்லாசமாக சுற்றுப் பிரயாணங்கள் நடைபெறும். இப்படியாக இயங்கும் பல்வேறு சங்கங்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் ஊக்குவிக்கவும் அவர்களுக்கு ஓர் முன்மாதிரியாக இருக்கவும் இரண்டாவது தடவையாக "தமிழர் விழா" என்ற சிறப்பான கலை நிகழ்ச்சியை வோல்த்தம்ஸ்ரோ நகர மண்டபத்தில் ஜனவரி 21 2017ல் அரங்கேற்ற விழாவின் ஒருங்கிணைப்புக் குழுவினர் பெருமுயற்சி எடுத்துள்ளனர். இதில் எமது அமைப்பான தமிழ் மூத்தோர் நலன்புரிச்சங்கம் இணைந்துள்ளது என்பது பெருமைக்குரிய விடயமாக அமைகிறது. இதன் போது கடந்த 30-35 வருடங்களாக தமிழுக்கும் சமுதாயத்திற்கும் அயராது உழைத்து பல விதமான சேவைகள் செய்த சிலரையும் விழாவில் கௌரவிக்க விரும்புவது மிகவும் வரவேற்கவும் விழா ஒருங்கிணைப்புக் குழுவினரின் பெருமுயற்சி பாராட்டுக்குரியதாகும்.

இவ்விழா சிறப்பான பெருவிழாவாக நடக்க திருவருளை வேண்டி தமிழ் மூத்தோர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில் மனம் கனிந்த அன்பும் ஆசியும் கூறி வாழ்த்துகின்றோம்.

## ஸ்ரீ சத்தியசாயி நிலையம் வோல்த்தம்ஸ்ரோ

### - வாழ்த்துச் செய்தி -

சாயி என்றால் அன்பு என்று அர்த்தம். மதமாச்சர்யங்களைக் கடந்து, பேதங்களை மறந்து அன்பால் அனைவரும் ஒருங்கிணைந்து வாழ உறுதுணையாய் தொழிற்படும் ஓர் ஆன்மீக இயக்கம் ஸ்ரீ சத்ய சாயி இயக்கம். பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் கோட்பாடுகளை சிரமேற்கொண்டு இயங்கும் ஒரு சர்வதேச இயக்கம் இது. இந்த மகா விருட்சத்தின் ஒரு சிறுகிளையே வோல்த்தம்ஸ்ரோ ஸ்ரீ சத்ய சாயி நிலையம்.

எமது கலாச்சாரத்தை இளைஞர்களிடையே எடுத்துச்செல்லும் ஓர் நிகழ்வாக இந்த தமிழர் விழாவை நான் பார்க்கிறேன். பேதங்களைவிட்டு பல அமைப்புக்கள் இணைந்து நடத்துவது மிகவும் வரவேற்கத்தக்கது. பல உலகியல் பிரச்சனைகளுக்குக் காரணமாயிருப்பது மக்களிடையே புரிந்துணர்வு எனும் தன்மை குன்றிப்போவதேயாகும். மக்களிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு போன்ற நற்பண்புகள் வளர இம்மாதிரியான நிகழ்ச்சிகள் துணைபுரியும் என்று நான் நம்புகிறேன்.

இயற்கை அன்னைக்கு நன்றி சொல்லும் உழவர் திருநாளாம் பொங்கல் விழாவாக இந்த தமிழர் விழாவை கொண்டாடுவது மிகவும் சிறப்பு. இந்த கலாச்சார நிகழ்ச்சி எம்மக்களிடையே ஓர் புத்துணர்ச்சியை உருவாக்கும் என்று நம்பலாம்.
இந்த நிகழ்ச்சி வெற்றிகரமாக அமையும்வேளை உலக மக்கள் யாவரும் மகிழ்ச்சியாகவும் மன அமைதியுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

"சமஸ்த லோகா சுகினோ பவந்து"

அமலன்.

## வோல்தம் பொறஸ்ட் தமிழ் அமைப்புக்கள்

மிக நீண்ட காலமாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியாக வோல்-தம்ஸ்ரோவும் அடங்குகின்றது. தாயக உணர்வுகளை நெஞ்சினில் நிறுத்தி, தொப்பூள் கொடி வேரை இறுகப்பற்றி, தாமும் நலமுடன் வாழ்ந்து தாயக உறவுகளுக்கு. நீளக்கரம் கொடுக்கும் சீரிய பணியை வோல்-தம்ஸ்ரோ மக்கள் நெடுநாளாகவே ஆற்றி வருகின்றார்கள். வந்தாரை வாழவைத்து வருவோரைக் காத்திருக்கும் செந்தமிழர்களாக இம்மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கம் இவற்றிற்கு தாய்ச்சங்கமாகத் திகழ்ந்து அனைவரையும் அணைத்து ஒருதாய் மக்கள் என்ற நல்லுணர்வோடு அமைந்து வருகின்றது. சகல இந்து கிறிஸ்தவ ஆலயங்கள். சாய் அமை-ப்புக்கள். மூத்தோர் அமைப்புக்கள். வாரி வழங்கும் வர்த்தக ஸ்தாபனங்கள் அனைத்தும் இணைந்து இத் தமிழர் விழாவை நடாத்துவது சிறப்பாக விடயமாகும்.

சிறப்பான கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவதோடு இலவசமாக இந்த நிகழ்ச்சியை நடாத்துவது அனைத்து தமிழ் மக்களும் பார்த்துக் களி-ப்படைய வேண்டும் என்ற பேரவாவிலாகும்.

இரண்டாவது வருடமாக வெற்றிகரமாக நடைபெறும் இந்நிகழ்ச்சி சிறப்புடன் அமைய எம்மால் இயன்ற பங்களிப்பை நல்கியுள்ளோம். தொடர்ந்தும் இந்நிகழ்ச்சியை எம் இளைய சந்ததியினர் சிறப்பாக நடாத்த வேண்டும் என்பதே எம் பேரவா.

விழா வெற்றிபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

விழா அமைப்பாளர் சார்பில்

**திரு சத்தியமூர்த்தி**

Uwps
UNIQUE WEDDING PARTY SERVICES

*Inspire your guests by creating an event that's truly unique.*

*Passion, Experience & Creativity, we have the perfect formula*
*Uwps where the occasion always exceeds your expectations*

திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் நிகழ்வுகள் மற்றும்
அனைத்து தேவைகளுக்கும்




Wedding Decoration / Balloons Decoration / Stage Arrangement /Banqueting Hall Decoration
Videography & Photography/ Catering/LCD Backdrop Hire/Fresh Flower Bouquet/ Gifts/ Party
Planning/ Chair Cover/ Marquee/ Table & Chair Hire/ Table Cloth Hire/ Centre Piece Arrangement

**Tel: 0203 086 9915 Mob: 0795 083 3135/ 0787 201 5560**

London, Uk, Europe

**www.uwps.co.uk I uwps@hotmail.co.uk**

FIND US ON


ABINA SUPERMARKET
அபினா தமிழ்க்கடை
இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்,
உடன் மரக்கறி வகைகள், கடலுணவுப் பொருட்கள்,
குளிர்பானங்கள், மற்றும் உங்களுக்குத்தேவையான
அனைத்து மளிகைப் பொருட்களையும்
மலிவாக பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
Tel : 020 8520 4867
132, Hoe Street, Walthamstow,
London E17 4QR
AMAX WORLD LTD
MONEY TRANSFER AND MONEY EXCHANGE
Sri Lanka, India, France, Germany, Holland, Switzerland,
Canada, Singapore, Malaysia, Dubai & More Countries.
துரித பணமாற்று சேவை (1 மணி நேரத்தில்)
உங்கள் பணத்திற்கு அதி கூடிய பெறுமதி
Tel : 020 8509 8077
132, Hoe Street, Walthamstow, London E17 4QR
E-mail: amaxworldltd@yahoo.co.uk



**B. Vasantha Gurukkal** BA (Hons)

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்

சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்

கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்

18 Chingford Road, Walthamstow, London, E17 4PJ



Home: 02085233802 |Temple: 02085273819 | Mob: 07903707878 | Email: Vasanthan@live.co.uk

# தமிழர் விழா

லண்டன் கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களின் மரபு அடையாளங்களை அணிவகுக்கும் மாபெரும் விழாவாக தமிழர் விழா நடைபெறுவது எமது பண்பாட்டு வளங்களை வளர்த்தெடுக்கும் நல்ல தருணம் ஆகும். ஊரைவிட்டு நாட்டை விட்டு நாம் வந்தாலும் எமது மூலப்பண்பாட்டின் மரபுகள் எம்மை விட்டுப் போகக்கூடாது என்பதில் பலர் இணைந்துள்ளனர். ஆன்மீக தளங்கள், அறிஞர் அவைகள், கல்விக்கூடங்கள் வணிக நிலையங்கள் எனப் பல்வேறு துறைசார் தமிழன்பர்கள் முறையாக எமது கலைவளங்களை காட்டும் உயர் விழாவாக இது அமைய உள்ளது.

பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்

என்ற எமது தமிழ் மொழிக்கு உரம் சேர்த்த வள்ளுவர் வாக்கு. பண்புகளைப் பேணுவதன் மூலம்தான் உலகம் இயன்றளவு இருக்கிறது இல்லாவிட்டால் மண்ணில் உலகம் மாய்ந்துவிடும் என்றார் வள்ளுவர். இவ்வாறான எமது பண்புகளை பரவச் செய்யவும் அதன் ஆழங்களை அகிலம் அறியச் செய்யவும் இவ்விழா முன்னிற்கும்.

வணக்கம் செலுத்தல் வரவேற்பு வழியனுப்புதல் விருந்துபசாரம் இல்லறம் போன்ற பல அடிப்படைப் பண்புகளை உடைய சமூகம் தமிழ்ச்சமூகம். எதிலும் கலை நயப் படைப்பு இருக்கும். வோல்தம்ஸ்ரோ பகுதியில் தமிழ்ப் பாடசாலை கற்பகபதி கற்பக விநாயகர் ஆலயம் இணைந்து பல இளம் சிறார்களை தமிழ் பேச்சு வன்மையுள்ளவர்களாக வளர்த்தெடுக்கும் முயற்சியின் பங்கும் இங்கு சுட்டிக்காட்டப் படவேண்டியது. இதே போன்று பல அமைப்புக்கள் இணைந்து தமிழ்ப் பயிரை இளம் சந்ததியினரின் நெஞ்சில் வளர்த்து வருகிறார்கள்.

அவர்களது ஆர்வத்தின் ஒரு அம்சமாக இவ்விழா அமைவதும் நன்மையே தருகிறது. பாரம்பரக் கலைகள் கோலாட்டம் காவடி ஆட்டம் பறையிசை பட்டிமன்றம் கவி அரங்கம் கருத்தரங்கம் நாடகம் நடனம் இசை போன்ற பல உள்ளத்திற்கும் உடலுக்கும் வலுவூட்டும் நிகழ்ச்சிகளாகும். தமிழர்கள் எங்கு சென்றாலும் தமது ஆன்மிகம் அறிவியல் என்பவற்றில் தம்மை வளர்த்தெடுப்பதில் பின்னிற்க மாட்டார்கள் என்பதை இது போன்ற விழாக்கள் முத்திரையாக இருக்கின்றன.

சென்ற வருடமும் பல நிகழ்வுகளுடன் வெற்றியீட்டிய தமிழர் விழா இம்முறையும் பல மகிவூட்டும் கலை நிகழ்வுடன் மிளிர்கிறது. வருடா வருடம் இவ்வாறு இன்னும் பல தமிழன்பர்களின் கூட்டு முயற்சியால் இந்நிகழ்வு நடைபெறுவதன் மூலம் எமது தமிழ் மரபு பேணப்படும் தமிழ் உணர்வு ஓங்கும். இளம் சந்ததி இனிதாக இணையும்.

வழி வழி மரபு பேணும் மாண்புகழ் தமிழர் என்றும் கலை வளர் நிலைகளோடு கவின் பெறு இசையும் மொழி வளம் பெருக முழங்கிடும் கவிவளமும் காலமெல்லாம் ஒளி பெற ஓங்கிடும் தமிழர் விழா பொலிவுறப் போற்றுவோம். புதிய தலைமுறை களியுறக் காட்டுவோம். கவலைகள் மறந்து நலிவுறும் நம் துன்பங்கள் நாடுவோம். இன்பங்கள் நந்தமிழ் நாடெல்லாம் தெளிவுற தெரிவிப்போம்.

## தமிழர் விழா அமைப்பாளர்களுக்கு!

புலர்ந்த புத்தாண்டின் முதல் மாதம், பிரித்தானியா கிழக்கு இலண்டன் மணம்கமழ் தமிழர்விழா!

தொன்மையும் இனிமையும் மிகு தமிழ்மொழி!

பொன்போன்று பேணும் எம் கலை, கலாச்சாரம், பண்பாடுகளை நம் வரும் தலைமுறைகட்குப் பகிர்வதற்கு எடுக்கும் பெருமுயற்சி! விழாக்கள் - உள்ளங்கட்கு உவகையும் உரமும்: குடும்பங்களில் இணைப்பும் மகிழ்வம்: சிந்தனைக்கிளறலின் கூரிய ஆயுதமும்: சிறார்களின் மகிழ்வும், செயற்திறன் வெளிப்பாடும்: விவித படைப்புகளை வெளிக்கொணரும் சந்தர்ப்பமும்: சமுதாயத்தில் சகோதரத்துவ உருவாக்கமும் அளிப்பன. இன்றைய எம் தமிழர்விழாவும் இவற்றை எமக்கு அளிக்கும் என்பது திண்ணம்.

அனைவரையும் ஒன்றிணைக்கும் இப்பாரிய முயற்சி எம்மை ஒற்றுமைக்கும், நல்லுறவுக்கும், உயரிய நோக்கிற்கும் இணைத்துச்செல்லும் என்பதும் நம்பிக்கை. இதனை ஒழுங்கு செய்யும் ஒன்றியத்தலைவர், அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் இறையருளுடன் கூடிய வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்வும் பெருமையும் அடைகின்றேன்.

இவ்விரண்டாவது முன்னெடுப்பு பயனுற, பலன்தர வாழ்த்துக்கள்.

அருட் சோதரி சோபியா
(திருக்குடும்ப சகோதரி)

# தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

# TAMIL CATHOLIC CHAPLAINCY

304 Garratt Lane, London SW18 4EH, United Kingdom


*13.01.2017*

வாழ்த்துவதில் மகிழ்கின்றேன் . . . .

புலம்பெயர் நாட்டில் தமிழர் விழா ஆனந்தம் ஆனந்தம், எத்தனை ஆனந்தம். தமிழ் சாகவில்லை, மொழி அணைந்து போகவில்லை. ஒரு மொழி என்பது மனிதனின் ஊடகம் மட்டுமல்ல அது அந்த இனத்தின் அடையாளமும் கூட. அந்த அடையாளத்தை புலம்பெயர் தேசத்தில் அடையாளப்படுத்த, விழாவாகக் கொண்டாடும் இத்தருணத்தில், என் ஆசியைக் கூறுவதில் மட்டற்ற மகிழ்வு கொள்கிறேன். இது வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். இம்முயற்சியில் பங்கு கொள்ளும் அனைத்து உள்ளங்களுக்கும் எனது பாராட்டைத் தெரிவித்து நிற்கின்றேன்.

தமிழ் விழா தமிழனின் பண்பாட்டை, கலாச்சராத்தை, மொழியை. கலையை. உலகறியச் செய்யும் என்பதில் ஐயமில்லை. தமிழ் வளரட்டும் வாழட்டும். . .

தமிழ் வாழ வளர விழா எடுக்கும் இவ்வேளையில் அவ்விழா சிறப்புற என் வாழ்த்துக்களையும், ஆசியையும் கூறிக்கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு
அருட்திரு செ. செபநேசரத்தினம்
இயக்குனர்
தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்


Chaplain : Rev. Fr. Sebanesaratnam Sebamalai, Mob - 07956460418
Tel:- 020 8870 6257. Email - tamil.chaplaincy@aol.co.uk Web - www.tamil-rcchaplaincy.org.uk


---


Affiliated to the Roman Catholic Archdioceses of Westminster, Southwark and Brentwood UK
Registered Charity—233699

# தமிழர் விழா 2017 - நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 4:40 | அறிவிப்பாளர் அறிமுகம் |
| 4:45 - 5:05 | வரவேற்பு இசை |
| 5:05 - 5:10 | அக வணக்கம் |
| 5:10 - 5:25 | மங்கள விளக்கேற்றல் |
| 5:25 - 5:35 | மங்கல இசை |
| 5:35 - 5:40 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 5:40 - 5:50 | வரவேற்புரை: திரு. MS வசந்தகுமார் |
| 5:50 - 6:35 | இசைச்சங்கமம் |
| 6:35 - 6:50 | நடனம் 1 & 2 |
| 6:50 - 7:50 | மதிப்பளிப்பு |
| 7:50 - 8:10 | நடனம் 3 & 4 |
| 8:10 - 8:15 | ஆசியுரை சிவஸ்ரீ வசந்தக்குருக்கள் |
| 8:15 - 8:20 | ஆசியுரை அருட்சகோதரி சோபியா அவர்கள் |
| 8:20 - 8:50 | தமிழ்க்கலாச்சார அழகியல் அணிவகுப்பு |
| 8:55 - 9:25 | வோல்த்தம்ஸ்ரோ தமிழ்ப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் - கருத்தாடல் |
| 9:30-10:00 | கவியரங்கம்: "என்னத்தை சொல்ல, எவரிடம் சொல்லியழ" |
| 10:00-10:10 | நன்றியுரை – திரு அமலன் |

# நிகழ்வுகளில் பங்குபற்றுவோர் பெயர் விபரங்கள்

**வரவேற்பு இசை:** விடுதலையின் குரல் இளையோர் அமைப்புடன் இணைந்து வோல்த்தம்ஸ்ரோ இளைஞர்கள்.

| | |
|---|---|
| ர.ஆதவன் | ர.சுஜானி |
| பிரிஜேஸ் | கு.தேனுஷன் |
| கு.தேவன் | வி.அகிந் |
| பா.றொய்ஸ் | B.டயானா |
| ச.மதுசான் | S.கோகேஸ் |
| S.ஸ்ரீபன் | N.றுவான் |

**தமிழ்த்தாய் கீதம்**
ஆக்கியவர் : புலவர் சிவநாதன்
இசையமைப்பு: ராகாஸ் இசைக்குழு
பின்னணி இசை வழங்குவோர்: சங்கீத வித்வான் திருமதி கலைவாணி இந்திரகுமாரின் மாணவர்கள்

**பாடுவோர்:** திருமதி துளசி முருகதாஸின் மாணவ மாணவியர்கள்

| | |
|---|---|
| தேவகன் குலராசசேகரன் | தேனுஷான் குலராசசேகரன் |
| சுஜந்தி ரவீந்திரன் | சைந்தவி இராஜநந்தகுமார் |
| ரோஷிணி முகுந்தன் | தேனிலா சத்தியசீலன் |
| அக்ஷா பாலமனோகரன் | அக்ஷயா தேவராஜசிங்கம் |
| ஹரிணி நாகராஜா | சுஜானி ரவீந்திரன் |
| டிலுக்ஷி பாஸ்கரன் | அஷ்விகா சுதாகரன் |
| மதுமிதா சத்தியமூர்த்தி | |

**இசைச்சங்கமம்:** நாத வித்யாலயாவும், வீணாலயாவும் இணைந்து வழங்கும் வாத்திய இசை சங்கீதவித்துவான் திருமதி கலைவாணி இந்திரகுமாரின் மாணவர்கள்

| | |
|---|---|
| லக்ஷன் சக்திரூபன் | பிரசாந்தி ஜனேஷ் |
| கவினா சுரேந்திரன் | நிருஷா நிர்மலன் |
| நேகா ஜனேஷ் | கீதன் குணசீலன் |

சங்கீத வித்வான் திருமதி செந்தில்செல்வி வாமனானந்தனின் மாணவர்கள்

| | |
|---|---|
| நிலோஜா நிர்மலன் | ஹரிணி பிரம்மா |
| மாதுமை பிரம்மா | வைஷ்ணவி சித்ராங்கன் |
| வர்ஷினி விவேகானந்தன் | |

இவர்களுடன்
மிருதங்கம்: விஜயராஜா
தபேலா: பார்த்தீபன்
Pad: கோகீஷ் சுரேந்திரன்

**நடனம் 1:** "குரு சமர்ப்பணம்" திருமதி சாரங்கா லட்சுமணனின் மாணவிகள்

கவினி அகிலகுலசிங்கம்
லோஜிபிரியங்கா மணிபல்லவராஜன்
சபிதாபிரியங்கா மணிபல்லவராஜன்
ரோஷிணி முகுந்தன்
ஹரிணி நாகராஜா
சுஜானி ரவீந்திரன்
மதுமிதா சத்தியமூர்த்தி
கஸ்தூரி சிவகுமார்
ராகவி சிவகுமார்
ரினுஷா சுரேந்திரன்
லக்ஷன்யா நிதிகரன்
லாவென்யா பிரபாகரன்
அபிஷினி ராகவன்
சைந்தவி இராஜநந்தகுமார்
சுஜந்தி ரவீந்திரன்

**நடனம் 2:** திருமதி பத்மினி குணசீலன் அவர்களின் மாணவிகள்

மெனுஜா பிரபாகரன்
சோவிதா விக்னேஸ்வரன்
சாலினி ரவீந்திரன்
நபோஷிகா நந்தேஸ்வரன்
லிசானா சற்குணராஜா ரம்யா பிரதீபன்
டலக்சலின் விமலேந்திரன்
ஹீரா நகுலேஸ்வரன்

**நடனம் 3:** திருமதி பத்மினி குணசீலன் அவர்களின் மாணவிகள்

பானு கந்தஞானி
மெனுஜா விஜயகுமார்
சாம்பவி அருள்குமார்
ஜெரோமி டேவிற்சந்திரன்
மயூரா ரவீந்திரன்
சாய் நிரஞ்சனி கந்தஞானி
லக்ஷிகா கெங்காதரன்
வர்ஷினி தவக்குமார்
நிருஷா நிர்மலன்
ஷாகித்தியா சிவபாலன்
அபினயா விஜயகுமார்

**நடனம் 4:** திருமதி அனுஷா சஜீவ் அவர்களின் மாணவிகள்

அனிகா சக்தி
கிரிடிஷா மணிவண்ணன்
காயத்திரி கௌரிகரன்
இந்துனா செல்வகுமார்
சாலினி ரட்ணம்
அஞ்சலா ல்ஷ்மிகாந்தன்
நிவேதா சஜீவ்

தமிழ்க் கலாச்சார அழகியல் அணிவகுப்பு
(ஆக்கம்: திருமதி சுமதி பிரபாகரன் (Nehana beauty & Fashions), திருமதி கசில்டா பாலமனோகரன்)

பங்குபற்றுவோர்

Group 1:

| | |
|---|---|
| சகேனா தவராஜா | ஜக்லின் திருலோகநாதன் |
| அக்ஷா பாலமனோகரன் | பிரணவி தனேசன் |
| நிகித்தா யோகேஸ்வரன் | லவணியா அருட்சந்திரன் |
| கனிஸ்ரா தியாகராஜா | |

Group 2:

| | |
|---|---|
| கிஷோனா கஜேந்திரன் | சஜீனா விஜயதரன் |
| துளசிகா நவரட்ணம் | யதனி சின்னராசா |
| மதுமிதா சத்தியமூர்த்தி | சைந்தவி ராஜநந்தகுமார் |
| டிலுக்ஷி பாஸ்கரன் | சஹானா சண்முகப்பிரியன் |
| திவேகா சந்திரகுமார் | அபிஷா நந்தீஸ்வரன் |
| வொஷிகா நவரட்ணம் | சுஜாலினி ரவிகுருக்கள் |
| லிதியா சுருதி சிங்கராஜா | வைஷ்ணவி சேயந்தன் |
| லக்ஷி பிரதீபன் | மொறின் ஃகுபேட் |
| கலைஅபிர்தா சின்னராசா | |

**கருத்தாடல்** - வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்தின் பழைய மாணவர் சங்கம்
ஆக்கம்: திரு கோகுலன் லெட்சுமணன்

பங்குபற்றுவோர்

| | |
|---|---|
| திரு.கோகுலன் லெட்சுமணன் | திருமதி கீர்த்தனா அரவிந்தன் |
| செல்வன் நந்தூஷன் கெங்காதரன் | செல்வன் கீதன் குணசீலன் |
| செல்வி ஜெரோமி டேவிற்சந்திரன் | செல்வி மயூரா ரவீந்திரன் |
| செல்வி லக்ஷிதா கெங்காதரன்1 | திருமதி கல்பனா கஜேந்திரன் |

கவியரங்கம்

| | |
|---|---|
| தலைமை புலவர் சிவநாதன் | சிவஸ்ரீ வசந்தக் குருக்கள் |
| கவிஞர் பாலரவி | டாக்டர் பாலபாஸ்கரன் |


**நன்றியுரை:** திரு அமலவண்ணன் அவர்கள்

# CONFEREES OF "PULAR OLI" (RISING STAR)
# &
# THEIR SERVICES TO THE TAMIL COMMUNITY

## 1. LATE MRS. KRISHNAVERNY MAHESWARAN (1983 TO 13.09.2015)

Late Mrs. Maheswaran (nee, Kanapathipillai) popularly known as Verny, was a passionate server of the Tamil Community, a quality she carried from her mother who was the first Chairwoman of a Village Council in Sri Lanka. Verny was touched by the atrocities the Tamils faced in Sri Lanka during the State sponsored Genocidal Riots in 1983 and was determined to support the Tamils arriving, seeking refuge in UK from their troubled Homeland. This determination made Verny to join with few like-minded people and in founding "Thamilar Marumalarchchi Sangam (Tamils Revival Organisation)" to provide support to the new arrivals. In 1986, with the influx of Tamils and their variety of needs gave rise to forming "Tamil Refugee Action Group (TRAG)" for providing advice and support on various issues. Verny was one of its founder members and continued to serve in its Committee for many years. She had also served as one of its volunteers in advising and supporting those who sought her services.

Housing the new arrivals became a major issue and "Tamil Refugee Housing Association (Now, Tamil Community HA) was formed in 1986 to support the homeless. "Tamil Refugee – Training and Education Centre (TR-TEC)" was another founded in 1989 for assisting the Tamil youth in seeking employment and in settling in UK. Verny played major roles in both of these organisations in founding and in serving the respective Committees. Again, Waltham Forest Thamil Sangam (WFTS) was founded in 1986 for uniting all the Tamils settled in LB Waltham Forest and providing Tamil Cultural environment to the Children and teaching them Tamil Language and Oriental Music and Art Forms. Here too Verny was an active member and led the Sangam and its Women Group as its Chair and in other executive positions.


Your Local Family Super Market
On Your Way
Best Foods
Est. 1959
SUPERMARKET
உங்களுக்குத் தேவையான
இலங்கை, இந்திய
மளிகைப்பொருட்கள்
மரக்கறி வகைகள்,
பழ வகைகள்
ஆலயத்திற்குத் தேவையான பூஜைப்
பொருட்கள்
மற்றும் அன்றாடம் தேவையான பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
156-158 Forest Road,
Walthamstow, London E17 6JQ
Tel: 020 8509 3322

# வோல்த்தம்ஸ்டோ இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கியம்

## உங்களை அன்புடன் அழைக்கிறது

## தமிழில் இறைவழிபாடு
## ஞாயிற்றுக் கிழமைகளில்
## காலை 8.15 முதல் 10.15 வரை

தமிழ் மொழியில் பாடல் ஆராதனை, தேவைகளுக்கான பிரார்த்தனை,
வேதாகம செய்தி, பிள்ளைகளுக்கான வேதாகம பாடங்கள்,
வாலிபர்களுக்கான ஆங்கில ஆராதனை

கிழமை நாட்களில் பெண்கள் ஒன்றுகூடுதல்,
ஜெப வழிபாடுகள், வேதாகமப் பாடங்கள்.
தனிப்பட்ட ஆலோசனைகளும் ஜெபங்களும் வழங்கப்படும்.

உங்கள் ஆன்மீக வாழ்வின் ஆசீர்வாதங்களுக்காகவும்,
அன்றாட வாழ்வின் தேவைகள் சந்திக்கப்படுவதற்காகவும் இறைவனிடம்
பிரார்த்திக்க விரும்பினால் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

ஞாயிறு ஆராதனை நடைபெறும் இடம்

## UNITED REFORMED CHURCH

58 Orford Road, Walthamstow, E17 9QL
Tel: 07814 252077 Web: www.tamilchurchuk.com

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும்
என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல்
தருவேன் என்பது இயேசுகிறிஸ்துவின் அழைப்பாயுள்ளது.

Besides, she also played an active leadership role in "Tamil Rehabilitation Organisation" that was raising funds for assisting those Tamils affected by war in Sri Lanka.

***WE ARE PLEASED TO CONFER THE TITLE 'PULAR OLI' ON MRS. KRISHNAVERNY MAHESWARAN IN RECOGNISING HER HUMANITY SERVICES SHE HAS RENDERED TO THE TAMIL COMMUNITY OVER A PERIOD FROM 1983 UNTIL THE DAY SHE WAS CALLED TO REST.***

## 2. MR. I. T. SAMPANTHAN (1982 TO DATE)

Mr. Sampanthan hails from Karainagar, Sri Lanka. He was a leading 'Trade Unionist' whilst in Sri Lanka and has led many successful struggles and labour tribunals. He is a politician, a writer, a journalist, a researcher, a religionist and a publisher.

Sampanthan founded "Sudaroli Publishing House" in 1982 in Sri Lanka and published over 22 books reviving many old and perished works of Tamil Scholars of $17^{th}$ & $18^{th}$ centuries. He had published 'London Sudaroli', a monthly magazine, continuously for seven years. He has also authored several books and launched their releases in countries internationally. His publications are acclaimed as best for their contents, clarity and historical support with evidence and they are widely read by the youth of today. Most of his books were published with English translation facilitating reading by non-Tamils.

Sampanthan is known for publishing books documenting with evidence the atrocities during repetitive communal riots the Tamils have faced since 1956 and the genocidal carnages the Sri Lankan State has led on Tamils from 1983 to date including 'disappearances'.

He served the Tamil Community in LB Waltham Forest by leading Waltham Forest Tamil School as its Head Teacher for over four years from 1992. During this period the School saw tremendous growth in number of students and teachers and its popularity even attracted people from adjoining Boroughs. He also, together with

Mrs T Sivagunam, began working for introducing a 'Common Tamil Syllabus' for all the Tamil Schools operative in London by seeking help and support from the Late Prof. Siva Sivathamby.

Sampanthan has been conferred various titles on him for the services he has rendered for the Tamil Language and Tamil Community by various national and international organisations.

***WE ARE PLEASED TO CONFER THE TITLE 'PULAR OLI' ON MR. J. T. SAMPANTHAN IN RECOGNISING HIS SERVICES TO THE TAMIL LANGUAGE AND TAMIL COMMUNITY.***

## 2. MRS. PATHMINI GUNASEELAN 1986 TODATE)

Mrs. Gunaseelan's journey in music and dance (Bharatanatyam) began by herself graduating from Adayar Chennai Music College and Bharatha Choodamani. She, popularly known as Pathmini, commenced her teaching career in Kopay Teachers Training College and continued her teaching in many schools before immigrating to UK in 1985. In 1986, Pathmini founded her own Dance School, 'Narthana Kalalayam School of Fine Arts' and began teaching Bharatanatyam and Carnatic music. Simultaneously, she also began teaching dance at Waltham Forest Thamil School and at London Sri Murugan Temple, Eastham. Over a period of three decades, she has produced over 500 students of high calibre Bharatanatyam Dancers with 37 of them graduating from her school including a British English Student and most of them have become high standard Dance Teachers and Examiners.

Pathmini also has produced several classical and contemporary Dance Dramas of high quality, mostly written and assisted by Pulavar Sivanathan, with some achieving highest awards in national and international competitions. There had never been a 'Remembrance Day Celebration' of our Homeland without a contemporary dance-drama performed by the students of Mrs. Pathmini Gunaseelan. Those dramas always carried very strong messages to the Tamil audiences attended in thousands to remember

those perished in our liberation struggle. She even experimented by staging Shakespeare's "Twelfth Night" as a dance-drama written in Tamil by Mrs Thevamalar Sivagunam and performed by her students on Silver Jubilee celebration of her Dance School, 'Narthana Kalalayam'. Her classical dance-dramas like 'Kuselar', 'Prapancha Leelai' etc. are still spoken of for their quality, style and presentation.

She was conferred several titles on her by famous leading Music and Bharatanatyam Institutions nationally and internationally recognising the quality and exceptionally high standard of performances of her students. Staging the Dance Drama 'Prapancha Leelai' in December 2014 in Chennai and Madurai earned her a title 'Natya Kalaviththaki' awarded by the World Tamil Centre and conferred by the Hon. Education Minister of Tamil Nadu, Mr. Veeramani and a title of 'Natya Sampoorani' conferred on her at Jeyanjali's International Dance Competition Awards Ceremony recently are two amongst the many she was conferred.

Pathmini is one of the co-founders of the Examination Board 'Academy of Fine Arts, London' and conducts dance examinations as the Chief Examiner.

**WE ARE PLEASED TO CONFER THE TITLE 'PULAR OLI' ON MRS. PATHMINI GUNASEELAN IN RECOGNISING HER SERVICES TO THE TAMIL COMMUNITY IN KEEPING ALIVE THE ORIENTAL DANCE FORM IN ITS ORIGINALITY AND CULTURE IN THE WESTERN CULTURAL ENVIRONMENT.**

## 3. MRS.THEVAMALAR SIVAGUNAM (1987 TO DATE)

After graduating from the University of Peradeniya, Sri Lanka, Mrs. Sivagunam (nee, Joseph) began her teaching career in 1970 teaching Tamil and other ancillary subjects at Jaffna Holy Family Convent. Teaching Tamil Language and writing and staging 'dramas' are her life-long passions. Contemporary and Classical Dramas written and trained by her when staged at the Convent were received enthusiastically. After moving to St Antony's College, Wattala she had staged 'miming' dramas after training students in that specific

technic so that the drama could be easily followed by the Sinhalese and Tamil audiences. The dramas and operettas (one-act-play) trained by her had achieved highest awards in district and national competitions.

After Mrs Sivagunam immigrated to UK in 1987, she continued her career as a Tamil Teacher by joining Waltham Forest Thamil School. She is with this school for over 25 years and as a teacher of discipline, parents wanted their children be taught under her care. Over the years, she has produced several students achieving highest levels in Tamil Language and that has created a thirst and desire amongst many students to learn the Language more and more. To quench this thirst, as a passionate Tamil Teacher, she began preparing those students teaching the Language at her home and made them to sit GCE O/L and A/L Examinations conducted by "University of Cambridge". Being a mother and carer for two children with learning disabilities, Mrs. Sivagunam has been providing this service for the last 22 years and over 100 students have successfully, most of them receiving higher grades, completed the GCE O/L Examinations to date.
Last year alone, 10 students sat for GCE O/L Examination and all of them have been successful receiving A* to C grades. In addition, one student passed the GCE A/L examination receiving an A* grading.

She also continued with her passion of writing and staging contemporary and religious dramas and plays and they were always received with excellent reception. Her dramas and plays carry strong messages and are well received by the audience. Few of the actors of her early years have migrated to other countries where they are excelling in dramas and plays in various platforms.

She had translated Shakespeare's "Twelfth Night" in poetry form that was staged as a Dance Drama in Bharatanatyam by Mrs Pathmini Gunaseelan when Pathmini celebrated the Silver Jubilee of founding her Dance School 'Narthana Kalalayam'.




*Best Wishes from*

**T.S.DRIVING SCHOOL**
**Tamil School of Driving**

**Mr.S.Sasikumar**
**Mob: 07737 135 409**





தமிழ் நிலா
தமிழ் நிலா
புலம் பெயர் உறவுகளினதும், அவர்தம் சிறார்களினதும், முத்தமிழ் நிகழ்வுகளை உங்கள் முன் சின்னத்திரை மூலம் அள்ளித் தருகிறது தமிழ் நிலா. புலம்பெயர் நாடுகளில் வாழும் எம் உறவுகளின் படைப்புக்களுக்கு தொலைக்காட்சி மூலம் மேடையமைக்கின்றது தமிழ் நிலா.
பேச்சுக்கள், நடனங்கள், நாட்டிய நடனங்கள், நாடகங்கள், வில்லுப்பாட்டுக்கள், கவியரங்கங்கள், பட்டி மன்றங்கள் கலை நிகழ்வுகள், தொலைக்காட்சியில் தமிழ்க் கல்வி, ஆலய நிகழ்வுகள் அனைத்தையும் உங்கள் முன் அள்ளித்தருகிறது தமிழ் நிலா.
கடல் பல கடந்து, கலைஞரை இணைக்கும், திடமுறு செயற்கு, கரமது தருவீர்! தமிழுக்கு, தமிழ்கலைக்கு உரம் சேர்க்கும் தரமான நிகழ்வுகளை எம் ஒளிபரப்புக்கு வாரி வழங்குங்கள்.
உங்கள் உளக்களிப்பில் நாமும் பங்கு கொள்வோம். உலகத்தமிழ் மக்கள் அனைவரும் மகிழட்டும். தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்வோம். இணைந்து கரம் கொடுங்கள். சர்வதேசம் எங்கும் தமிழ் மணம் பரப்புவோம்.
IP TV ஊடாகவும், இணையத்தளம் ஊடாகவும் பவனி வருகிறது
t: 0208 521 3967
e: adverts@tamilnila.tv
w: www.tamilnila.tv


JR Print
www.jrprint.com
- experience of the power -
25 YEARS EXPERIENCE IN THE PRINTING INDUSTRY
QUICK, QUALITY & AFFORDABLE SERVICE
CALL US FOR
QUOTATION & QUERIES:
0208 503 6643
www.jrprint.com
www.jrdigitals.com
Occasional Invitations
High Quality Offset Printing
& Many More...
SignBoard Solutions
Vehicle Wrapping & Signs
Wide Format Printing
Full Colour
Any Size
61
Hoe Street,
Walthamstow
London
E17 4QR
0208 503 6643
jrprintuk@gmail.com
Digital Printing
High Quality Offset Printing
Occational Invitations
Wide Format Printing
Signboard Soulutions
Vehicle Wrapping & Signs
Web Design &
E-commerce Solutions & more

***WE ARE PLEASED TO CONFER THE TITLE 'PULAR OLI' ON MRS. THEVAMALAR SIVAGUNAM IN RECOGNISING HER SERVICES TO THE TAMIL COMMUNITY BY PROVIDING TAMIL EDUCATION AND BY WRITING AND STAGING CONTEMPORARY DRAMAS GENUINELY ATTEMPTING TO KEEP THE TAMIL CULTURE ALIVE IN THE WESTERN CULTURAL ENVIRONMENT.***

## 4. MR L VARATHALINGAM (1983 TO DATE)

Mr. Varathalingam, popularly known as Varatha, is a passionate server of the Tamil Community. He was touched by the atrocities the Tamils faced in Sri Lanka during the State sponsored Genocidal Riots in 1983 and was determined to support the Tamils arriving, seeking refuge in UK from their troubled Homeland. This determination made him to join with few like-minded people and in founding "Thamilar Marumalarchchi Sangam (Tamils Revival Organisation)" to provide support to the new arrivals. In 1986, with the influx of Tamils and their variety of needs gave rise to forming "Tamil Refugee Action Group (TRAG)" for providing advice and support on various issues. Varatha was one of its cofounder and continued to serve in its Committee for many years.
Housing the new arrivals became a major issue and "Tamil Refugee Housing Association (Now, Tamil Community HA) was formed in 1986 to support the homeless. He was one of the founder members and an architect in founding and moulding this Association over the years. He joined its Management Committee since 1994 and continuously advising them on further enhancing the provision of services whilst keeping abreast with local ever-changing Statutory Regulations. Today he leads its Management Committee as its Chairman. Waltham Forest Thamil Sangam (WFTS) was another where he became very involved from its founding in 1986 until its developed stage of today. This was founded for uniting all the Tamils settled in LB Waltham Forest and providing Tamil Cultural environment to the Children and teaching them Tamil Language and Oriental Music and Art Forms. He was one of the cofounders and continued serving in its Management Committee holding executive positions and worked for its development. Thamil Sangam became popular amongst non-Tamil communities in the Borough by him

liaising and working with Councillors of LB Waltham Forest. He also voluntarily offered advice and guidance on immigration matters, housing and welfare benefit issues during years 1992 to 2006.

Besides, Varatha also played an active leadership role in "Tamil Rehabilitation Organisation" that was raising funds for assisting those Tamils affected by war in Sri Lanka. He has played active roles in organising fund raising activities such as TRO annual national and international football matches, etc.

In addition, he also has a passion for taking part in classical and contemporary dramas. He had several excellent performances to his credit. He was a member of "Kalari Art Council" and has worked with Mr. Thacicious, a renowned Dramatist and Writer. He also was a member of the Drama Group of Pulavar Sivanathan who is known for his excellent contemporary and controversial dramas. Varatha had performed excellently in Dramas of both these Drama Exponents.

***WE ARE PLEASED TO CONFER THE TITLE 'PULAR OLI' ON MR. L VARATHALINGAM IN RECOGNISING HIS SERVICES TO THE TAMIL COMMUNITY OVER A PERIOD OF 30 YEARS.***

- * **END** * -

# வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கம்
# WALTHAM FOREST THAMIL SANGAM

## வோல்தம் பொறஸ்ட் தமிழ்ப் பாடசாலையின் கல்வித்திட்ட ஆண்டு 2016/17

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வோல்தம் பொறஸ்ட் வாழ் தமிழர் மத்தியில் செயற்பட்டு வரும் வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ப்பாடசாலை தனது 2016/17 ஆண்டிற்கான கல்வி ஆண்டு சனிக்கிழமை 10ம் திகதி செப்ரெம்பர் 2016 காலை 9.30 மணிக்கு ஆரம்பித்துவிட்டது.

- கடந்த 2015/16 கல்வி ஆண்டில் எமது தமிழ்ப்பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், அசிரியர்களின் ஆதரவுடன் சிறப்பாக தமது கல்விச் செயற்பாட்டை வெளிப் படுத்தியுள்ளனர்.

- 2015-16 கல்வி ஆண்டில் கல்வி மேம்பாட்டுக் கழகத்தால் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் சர்வதேச தமிழ்மொழி பரீட்சையில், எமது பாடசாலையில் 21 மாணவர்கள் அதிதிறன் Excellent சித்தியும், 94% மாணவர்கள் சித்தி பெற்று அடுத்த ஆண்டுக்கு முன்னேறிச்செல்கின்றனர்.

- **GCSE Cambridge Examination Board** யினால் நடாத்தப்படும் தமிழ்ப்பரீட்சையில் சென்ற ஆண்டு 9 மாணவர்கள் விசேட சித்தியுடன் சித்தியடைந்துள்ளனர்.

- **GCSE** வகுப்புகள் வளர்தமிழ் கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு (ஆண்டு 6, 7, 8 வகுப்பு மாணவர்களுக்கு) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**பாடசாலை நடைபெறும் இடம், காலம்**
**சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் பி.ப. 1.30 மணி வரை**
**Frederick Bremer School**
Siddeley Road (Off Fulbourne Road), London E17 4EY

**எமது பாடசாலையில் தமிழ்க்கல்வியுடன், நுண்கலைகளான நடனம், வாய்ப்பாட்டு (சங்கீதம்) வீணை, வயலின், மிருதங்கம் போன்ற பாடங்கள் தகுதி வாய்ந்த நுண்கலை ஆசிரியர்களால் (Prominent Teachers) கற்பிக்கப்பட்டு வருகின்றது.**



## Supplementary Classes

We also provide special classes for students who need extra support in their mainstream school.

**தொடர்புகட்கு:**

சாரதா ரவீந்திரன் (பாலர் முதல் ஆண்டு 3): 020 3774 9203
கசில்டா பாலமனோகரன் (ஆண்டு 4 முதல் 10) 07877 698 625
கோமதி பிரபாகரன் (நுண்கலை பாடங்கள்): 07453 605 387

**மேலதிக விபரங்கள்:**

வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கம் - Waltham Forest Thamil Sangam
பாரைவி (தலைவர்): 07939 998 730
குகன் (தலைமை ஆசிரியர்): 07961 158 453

www.wfts.org.uk

# RAGU
## ESTATE AGENTS

நம்பிக்கையான, நாணயமான
மற்றும் தரமான சேவைக்கு இன்றே நாடுங்கள்

**Sales | Lettings | Mortgages**
**Constructions | Property Management**

வீடுகள் வாங்க, விற்க, வீட்டைப் பராமரிக்க,
வாடகைக்கு விட மற்றும் அனைத்துவித
வீட்டுக்கடன் வசதிகளுக்கும் உடனே நாடுங்கள்

The Property Ombudsman

Tel: 020 8586 2323
Mob : 07985 219 519



258 High St North
Manor Park
London E12 6SB

ragu_travels@hotmail.com
www.ragutravels.co.uk

Registration Number 4521837

# *From 5yrs - 12 yrs*

10-20 minutes practice everyday
Weekly 2 hour Teaching & Learning sessions
Structured syllabus for every level - No repetition
Each level completes in 12 weeks
Simple level assessments

## *The pioneer and leading organisation in Abacus Mental Arithmetic education*



This unique educational approach, improves students from their very basic knowledge of numbers to the mastery of mental arithmetic.

## *Your Child's Intelligence*

Developing the potential of the LEFT & RIGHT brain to unleash y our Child's Intelligence



| LEFT Brain | RIGHT Brain |
|---|---|
| Logic | Creativity |
| Analysis | Imagination |
| Sequencing | Holistic Thinking |
| Language | Non-Verbal |
| Computation | Visualisation |






## *Program enhances:*

Image memory • Listening skills


Concentration • Self confidence • Speed & accuracy

**Centre 1: Select Office, E12 6SA   Centre 2: Beal High School, IG4 5LP**

**Select Academy**

**07776 060 003**

**admin@selectacademy.eu**


SALES & LETTINGS
Emmaland Ltd
75a, Forest Road, Walthamstow, London E17 6HF
Tel: 020 8527 8595 Mob: 07436 806 608
Email: empirelets@aol.com
Web: www.emmaland.co.uk